Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 26, 2024

திங்கட்கிழமை, 30 டிசெம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 125 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## 9 ஓட்டோக்களை திருடிய ஐவர் கைது

கொழும்பு- கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் கடந்த 27ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது 09 முச்சக்கரவண்டிகள் மற்றும் திருடப்பட்ட பொருட்களை வைத்திருந்த மேலும் நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முழுச் செய்தி P2



## வலி நிவாரணி மருந்தை அருந்திய குழந்தை மரணம்

வீட்டில் இருந்த வலி நிவாரணி மருந்தை அருந்திய இரண்டு வயது ஏழு மாதங்களேயான குழந்தை கடுமையான ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் - கலடிய பிரதேசத்தில் வசிக்கும் எஸ்.ஏ.வினுக மண்டிட் என்ற குழந்தையே உயிரிழந்தது. மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் இளைய பிள்ளை எனத் தெரிவிக்கப்படுகிறது.


முழுச் செய்தி P2



## பாண் சாப்பிட்டவர் திடீர் மரணம்

யாழ்ப்பாணம்-உரும்பிராய் பகுதியில் சனிக்கிழமை(28) அன்று உணவு உட்கொண்டிருந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய காசிப்பிள்ளை குவேந்திரன், திடீர் சுகவீனமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

முழுச் செய்தி P2



## "மீனவர் பிரச்சினைகளை தீர்க்க முயல்கின்றோம்"

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுவது நன்றாகத் தெரிந்தும் இங்குள்ள அரசியல்வாதிகள் ஏன் மௌனம் காக்கின்றனர். மீனவர் விவகாரத்தில் இந்த அரசியல்வாதிகள் எந்தப் பக்கம் நிற்கின்றனர் என எமக்குத் தெரியவில்லை எனத் தெரிவித்த மீன்பிடித்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எங்களால் இயன்ற நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறோம் என்றார்.

இலங்கை இந்திய மீனவர் விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அமைச்சர்

முழுச் செய்தி P2

# "தமிழ் ஊடகத்துறையை பாதுகாக்கவும்"

### ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்



■ எஸ். தில்லைநாதன்

தமிழ் ஊடகத்துறை பல்வேறுபட்ட நெருக்கு வாரங்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனை கடத்த முயற்சித்த நிலையில், அவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடரும் அச்சுறுத்தலின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது என யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தியுள்ளது.

சமூக மட்டத்திலும் நிர்வாகக் கட்டமைப்புகளிலும் இடம்பெற்று வரும் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகள், முறைகேடுகளைப் பகிரங்கமாக ஊடக அறிக்கையிடல் மூலம் வெளிப்படுத்தி வரும் மு.தமிழ்ச்செல்வன் மீது கிளிநொச்சி நகரில் ஏ-9 நெடுஞ்சாலையில் வைத்து பட்டப்பகலில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் மற்றும் தாக்குதல் முயற்சி சட்டம் ஒழுங்கை கேள்விக்குள்ளாக்கி உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

முழுச் செய்தி P2

### "ஒரு மோட்டார் சைக்கிளில்

## 2 பேருக்கு மேல் செல்லாதீர்கள்"

■ பாறுக் ஷிஹான்



நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக வீதி விபத்துகள் அதிகரித்து வருவதால், பின்வரும் நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்றுமாறு நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு இரண்டு பேருக்கு மேல் மோட்டார் சைக்கிளில் பயணிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்

சிறு பராயத்தினர் மற்றும் முறையான சாரதி அனுமதிப்பத்திரம் அற்றவர்களுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு வழங்குகின்றவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

முழுச் செய்தி P2



## "பெருமளவிலான நிலங்களை வன இலாகா அபகரித்துள்ளது"


■ விஜயரத்தினம் சரவணன்

கடந்த 2009இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் பாதுகாக்கப்பட்ட தமிழ் மக்களின் பெருமளவான விவசாய மற்றும், குடியிருப்பு நிலங்கள் தற்போது வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முழுச் செய்தி P2

## சீதுவ துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி; இருவர் காயம்

■ டி.கே.ஜி.கபில



சீதுவ, லியனகே முல்ல பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் துப்பாக்கிச் சூடு குழுவினர், நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

சம்பவ தினமான சனிக்கிழமை(28) பிற்பகல் 05.35 மணி அளவில், காரில் வந்து முகங்களைக் கறுப்புத் துணியால் மூடிய நான்கு பேர் கொண்ட குழுவினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் டெரன்ஸ் பிரசன்னா என்ற 53 வயது வர்த்தகர் உயிரிழந்துள்ளார்.

மேலும், அந்த வீட்டில் சோபாவில் உறங்கிக் கொண்டிருந்த 74 வயதான நோயல் பெர்னாண்டோ மற்றும் அவரது இளைய மகன் சம்பத் வசந்த (45) ஆகியோர் இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

காயமடைந்த தந்தை நோயல் பெர்னாண்டோ நீர்கொழும்பு பொது வைத்தியசாலையிலும் அவரது மகன் சம்பத் வசந்த கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மேலதிக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் டொயோட்டா ரக காரை, கட்டுநாயக்க, கோவின்னா சுடுகாட்டுக்கு அருகில் விட்டுவிட்டு, அதற்கு தீ வைத்துவிட்டு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தப்பிச் சென்றதுடன், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தீயணைப்புத் திணைக்கள வாகனம் சம்பவ இடத்திற்கு விரைந்து , தீயை அணைக்க நடவடிக்கை எடுத்தது.



## 75,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி

அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டதன் பின்னர் சனிக்கிழமை (29) வரை 75,000 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட 75,000 மெற்றிக் தொன் அரிசியில் 32,000 மெற்றிக் தொன் கெக்குலு அரிசியும் 43,000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் உள்ளடங்குவதாகவும், சுங்கத்திற்கு இருக்கும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விரைவில் விடுவிக்கப்படும் என்றும் அருக்கொட குறிப்பிட்டார்.

நாடு எதிர்நோக்கும் அரிசி நெருக்கடிக்குத் தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தைத் தனியார்த் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் கடந்த 4ஆம் திகதி அனுமதியளித்திருந்தது.



## கொக்கெய்னுடன் கானா பெண் கைது

■ டி.கே.ஜி.கபில

சுமார் 142 மில்லியன் ரூபாய் பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து "கிரீன் சேனல்" ஊடாக வெளியேற முற்பட்ட கானா நாட்டுப் பெண்ணொருவரை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று 29ஆம் திகதி அதிகாலை கைதுசெய்துள்ளனர். .

அவர் ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள கானாவில் வசிக்கும் 41 வயது பெண் என்றும் எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டவர் என்றும் சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தோஹாவிலிருந்து கட்டார் ஏர்வேஸ் விமானமான KR-658 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை 29 காலை 01.50 மணியளவில் வந்தடைந்தார்.

அவர் கொண்டு வந்த 02 பயணப் பொதிகளில் 04 கிலோ 068 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றினர்.

பின்னர், குறித்த பெண்ணையும் அவர் கொண்டு வந்த போதைப் பொருட்களையும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இலஞ்சம் வாங்கிய அறுவருக்கு விளக்கமறியல்



ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சலோச்சன கமகே உள்ளிட்ட 6 பேர் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 90 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்றுக் கொண்ட போது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

டொரிங்டன் அவினியூ பகுதியில் அமைந்துள்ள காணியொன்றை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைத்த பின்னர் அந்த காணிக்கான நட்டஈடு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக சந்தேகநபர்களினால் இலஞ்சம் பெறப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# "பெருமளவிலான நிலங்களை வன இலாகா அபகரித்துள்ளது"

இவ்வாறு வனவளத் திணைக்களத்தினால் அடாவடித்தனமாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பகுதிகளில் வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வன்னிப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் இடம்பெயர்வைச் சந்தித்து மீள் குடியேறியமை அனைவரும் அறிந்ததே. சில இடங்களில் குறிப்பட்டளவு காலங்களுக்குள்ளும், சில பகுதிகளில் நீண்ட காலங்களுக்குப் பின்னர் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில், மக்கள் இடப்பெயர்வுக்கு என்பதாகப் பயிர் செய்கையில் ஈடுபட்ட காணிகள் தற்போது பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்போது இவ்வாறு பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கும் எமது மக்களுக்குரிய காணிகளுக்கு, எவ்வித முன்னறிவிப்புக்களுமின்றி வனவளத் திணைக்களத்தினர் தற்போது எல்லைக் கல்லிடுகின்ற அடாவடித்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தந்த மாவட்டச் செயலாளருக்கு, பிரதேச செயலாளருக்கு, கிராம அலுவலருக்கு, காணிகளுக்குரிய மக்களுக்கோ அறிவிக்காமலேயே இவ்வாறு எல்லைக் கல்லிடும் பணிகளில் வனவளத் திணைக்களத்தினர் ஈடுபடுகின்றனர்.

பூர்வீகமாக பயிர்செய்கையில் ஈடுபட்டுத் திறம்பட வாழ்ந்துவந்த எமது மக்களின் பயிர்ச்செய்கை நிலங்கள் இதில் அதிகமாக வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்புத் தொடர்பில் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்டலாம் என நினைக்கின்றேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006ஏக்கர், 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல்லைக் கல்லிட்டு 4,35000ஏக்கர் காணிகள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அந்த வகையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாத்தால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென நாம் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றோம். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கத்திடமும் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள எமது மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

நாட்டிற்கு காட்டு வளம் தேவைதான். அதற்காக நாட்டுக்கான ஒட்டுமொத்த காடையும் வன்னிக்குள் இருந்து உருவாக்க வேண்டுமென நினைத்தால் அது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும்.

வன்னியில் மக்களிடம் இருந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவ்வாறு விடுவித்தாலே எமது மக்களால் தமது வாழ்வாதாரத்தைக்கொண்டுசெல்லமுடியும்.


வன்னி மக்கள் சிறந்த உழைப்பாளர்கள். அவர்கள் உழைத்து வாழ்ந்த நிலங்களே இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

எனவே அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் வனவளத் திணைக்களத்தின் இந்த அடாவடித்தனமான செயல்பாடு தொடர்பில் கவனம் எடுக்கவேண்டும். ஜனாதிபதி, பிரதமர், வனவளத் திணைக்களத்தோடு தொடர்புடையவர்களுடனும் நாம் இணைந்து பேசி இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# "2 பேருக்கு மேல் செல்லாதீர்கள்"

தலைக்கவசம் இன்றியும் அதிக வேகத்துடன் மோட்டார் சைக்கிளை ஓட்டி செல்வதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

# சிறிய தாத்தா ஓட்டிய லொறியில் மோதுண்டு குழந்தை மரணம்




தனது சிறிய தாத்தா ஓட்டிய லொறியில் மோதுண்டு, ஒரு வயதும் எட்டு மாதங்களேயான பெண் குழந்தையான செனுஷி சிஹன்சா, சனிக்கிழமை (28) மாலை உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம், மினிபே, ஹசலக்க, கினபலஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மாத்தறையில் உள்ள தாயாரின் வீட்டில் வைத்தே உயிரிழந்துள்ளார், வீட்டிற்குத் தண்ணீர் எடுத்துச் செல்வதற்காக லொறியை இயக்கிய போதே, அந்த லொறியின் அடிப்பட்டு உயிரிழந்துள்ளார்.

லொறியில் அடிபட்ட குழந்தையை அக்கம் பக்கத்தினர் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அக்குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

சம்பவம் தொடர்பில் ஹஸ்லக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், லொறியை செலுத்தி வந்த உயிரிழந்த குழந்தையின் சிறிய தாத்தா கைது செய்யப்பட்டுள்ளார்.

# "தமிழ் ஊடகத்துறையை பாதுகாக்கவும்"

போர்க் காலத்திலும் அதன் பின்னரும் தமிழ் ஊடகத்துறை ஆயுத முனையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டும் அதன் காரணமாகப் பல ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டும், கடத்தப்பட்டு சடலங்களாக வீசப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் வந்துள்ளனர்.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான காலத்தில் தமிழர் தாயகத்தில் வன்முறை கலாசாரம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்பட்டு வருவதும் அதன் பின்னணியில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் சமூக விரோத செயற்பாடுகள் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளோரால் இவை கண்டும் காணாமல் விடப்படுகின்றமையும் அதற்குக் காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாது பாதுகாக்கப்பட்டு வருகின்றமையும் ஆட்சிகள் மாறினாலும் மாற்றமுமின்றி தொடர்கின்றமையானது அந்நிலையை மேலும் ஊக்குவிப்பதாகவே இருந்து வருகின்றமை எந்நிலையிலும் மறுக்கவே முடியாத பேருண்மை ஆகும்.

இவ்வாறான நிலையில் முன்னைய காலங்களில் ஆயுத முனைகளால் பேச முடியாதவற்றைத் தற்காலத்தில் வன்முறைச் சம்பவங்கள் மூலமாக தமிழ் ஊடகத்துறையை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ட அடக்குமுறை செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. இவ்வாறான நிலையில் நிகழ்ந்துள்ள இத்தாக்குதலானது ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாகும். இச் செயற்பாட்டினை தனியே குறித்த ஒரு ஊடகவியலாளருக்கு எதிரான உரிமை மீறலாகக் கடந்து சென்றுவிட முடியாது.

அந்த வகையில், சமூக விரோத செயற்பாடுகளைத் துணிச்சலுடன் வெளிச்சம் போட்டுக் காட்டிவரும் சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் சம்பவத்தை யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையிலான புதிய அரசாங்கத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்கின்றமை ஏமாற்றமே. இத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டு இருவர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் காரணமானது விடயத்தைத் திசைதிருப்பி உண்மை குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில் திட்டமிட்டுக் கூறப்பட்டிருப்பதாக, தாக்குதல் சம்பவத்தின் போது அவர்கள் வெளிப்படுத்திய வார்த்தைப் பிரயோகங்களின் பின்னணியில் ஆணித்தரமாக நம்பப்படுகின்ற நிலையில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எமக்கும் பலத்த ஐயம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே குறித்த கைது சம்பவத்தோடு மட்டுப்படுத்தப்பட்டதாக விசாரணை நடவடிக்கைகள் முற்றுப்பெறாது பின்னனிருந்து செயற்படுத்திய உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யும் வகையிலானதாக முன்னெடுக்கப்பட வழிவகை செய்ய வேண்டும்.

தமிழ் ஊடகத்துறை மீது காலத்திற்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் தொடரும் அச்சுறுத்தல் நிலையை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கும் அதற்குக் காரணமானவர்களைப் பாரபட்சமின்றி சட்டத்தின் முன் நிறுத்தி உரிய நீதியை வழங்குவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இத்தருணத்தில் யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தியுள்ளது.

# 9 ஓட்டோக்களை திருடிய ஐவர் கைது

கொழும்பு மத்திய பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீதுவ, மாளிகாவத்தை, கிராண்ட்பாஸ் மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் சனிக்கிழமை (28) கைது செய்யப்பட்டு கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் 31, 38, 51 மற்றும் 54 வயதுடைய சீதுவ, ஒருகொடவத்தை, கொழும்பு- 10 மற்றும் கொழும்பு- 14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கைப்பற்றப்பட்ட முச்சக்கரவண்டிகள் கோட்டை, கிரிபத் கொடை, வத்தளை மற்றும் பொரளை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் திருடப்பட்டவை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கோட்டை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# வலி நிவாரணி மருந்தை அருந்திய குழந்தை மரணம்

சம்பவத்தின் பின்னர் முந்தலம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை, புத்தளம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, கொழும்பு-ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளது.

உறவினர் வீட்டுக்குச் செல்வதற்குப் பெற்றோர் மூன்று குழந்தைகளையும் தயார் செய்து கொண்டிருந்த போது, தாயின் காலில் ஏற்பட்ட காயத்திற்குக் கொண்டுவரப்பட்டு, யாரும் கவனிக்காமல் உயரமான இடத்தில் வைக்கப்பட்டிருந்த வலி நிவாரணி மருந்தைச் சிறு குழந்தை கையில் வைத்திருப்பதைத் தந்தை கவனித்துள்ளார். அந்த போத்தல் மூடி கடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே, பெற்றோர், தனியார் மருத்துவ மனையில் உள்ள மருத்துவரிடம் குழந்தையைக் காண்பித்து விட்டு, அவருடைய அறிவுறுத்தலின் பிரகாரம், முந்தலம வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

# 2,700 குடும்பங்களுக்கு நிவாரணம்

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தினால் 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெள்ள நிவாரணப் பொதிகள் 2,700 குடும்பங்களுக்கு மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை(29) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மண்டூர் பிரதேச மக்களுக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு போரதீவுபற்று பிரதேச செயலாளர் எஸ்.ரங்கதான் அவர்களின் மேற்பார்வையின் கீழ் மண்டூர் -1, மண்டூர் - 2, மண்டூர் - 3, மண்டூர் தெற்கு, கோட்டைமுனை, பாலமுனை, தம்பலவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள 2700 குடும்பங்களுக்கு 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு நிவாரண பொருட்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.





# "மீனவர் பிரச்சினைகளை தீர்க்க முயல்கின்றோம்"

சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுடன் அல்லது இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை இல்லை என்று நான் சொல்லவில்லை. இப்போதும் கூட கடற்றொழில் அமைச்சில் இருக்கின்ற அதிகாரிகள் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது.

கடந்த வாரம் கூட இந்தியத் தூதுவருடனும் இது சம்பந்தமாக நாங்கள் பேச்சுவார்த்தை நடாத்தினோம். அதேபோன்று ஜனாதிபதி கூட இங்கு இருக்கிற தூதுவர்களுடன் இது சம்பந்தமாகப் பேசியது மட்டுமல்லாமல் இந்தியா சென்ற போதும், இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

ஆகையினால், யாரும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றில்லை. பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான காரணம் என்ன என்பது எங்களுக்கு இருக்கிற பிரதானமான பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது.

விசேடமாக இன்று எல்லோருக்கும் தெரியும் நாட்டில் இருக்கிற எமது மீன்பிடி வளம் முற்றாக அழிக்கப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள ஒரு சில மீனவர்கள் தான். அவர்கள் மீன்களையோ இறால்களையோ மாத்திரமல்ல ஒட்டுமொத்த வளங்களையும் நாசமாக்கிச் செல்கின்றனர்.

அதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் நாசமாக்கப்படுகிறது. அதை நம்பி தான் அவர்கள் வாழ்கின்றனர். அவர்களது வாழ்வாதாரம் அழிக்கப்படுகிற போது பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக நாம் மீனவர்களுடன் பேசுகிற போது இந்திய ஆக்கிரமிப்பை நிறுத்துங்கள் இல்லாவிட்டால் தாங்கள் எல்லோரும் குடும்பத்துடன் கடலில் வீழ்ந்து சாகப் போவதாகச் சொல்கின்ற நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு தூதுவர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் அது நன்றாகவே தெரியும்.

அது மட்டுமல்லாது, இங்கு இருக்கிற அரசியல் வாதிகளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இந்திய மீனவர் விவகாரத்தில் அரசியல்வாதிகள் எல்லோரும் ஏன் மௌனம் சாதிக்கின்றார்கள். இந்த விடயம் பற்றிப் பேசுகிற பொழுது அவர்கள் எந்தப் பக்கம் சாய்ந்து இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது.

இந்தியாவிலும் தடைசெய்யப்பட்ட இந்த வலையை நிறுத்துவதற்கு எங்களால் இயன்ற நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். இவ்வாறான நடவடிக்கைகள் எடுத்து வருகிற போது, அதிகாரிகளுடனான பேச்சு தொடர்ந்து நடந்து வருகிறது என்றார்.

# பாண் சாப்பிட்டவர் திடீர் மரணம்

அவர், பாண் சாப்பிட்டுக்கொண்டு இருந்தவேளை, அவருக்கு சுவாசிக்க சிரமம் ஏற்பட்டுள்ளது. குறித்த நபரை கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, அவர் ஏற்கெனவே, உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆஸ்துமா காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது.

# தாயின் தகாத உறவால் சிறுமி பலி

தன்னுடன் தகாத உறவில் ஈடுபட்டு வந்த பெண், வேறொருவருடன் தொடர்பில் இருப்பதாக ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிப்போகவே, அந்த நபர், தான் மறைத்து வைத்திருந்த கத்தியால், பெண் மற்றும் அவருடைய இரண்டு பிள்ளைகளையும் வெட்டியுள்ளார். இதில், 13 வயதுடைய சிறுமி உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம், பிலியந்தலையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து, சந்தேக நபர், தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளதாகவும் பின்னர் பொலிஸ் நிலையத்தில் சரணடைவதாக வீட்டாரிடம் கூறி, வீட்டை விட்டு வெளியேறித் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுமியின் தாயாரின் இடது முழங்கை, இடது தோள்பட்டை தலை மற்றும் இடது காதில் காயங்கள் ஏற்பட்டுள்ளன., மூத்த சகோதரியின் இடது கை வெட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘வர்ண விருது’ வழங்கும் விழா

சோட்டோகான் (Shotokan) கராத்தே அக்கடமி இன்டர்நேஷனல் கலையகத்தின் ‘வர்ண விருது’

வழங்கும் விழா மற்றும் 25ஆவது வருடப் பூர்த்தி வைபவம் சோட்டோகான் கராத்தே அக்கடமி இன்டர்நேஷனல் கலையத்தின் பணிப்பாளர் சிஹான். அன்ரோ டினேஷ் தலைமையில் கொழும்பில் வெள்ளிக்கிழமை (27) நடைபெற்றது.

மேற்படி நிகழ்வின், பிரதம விருந்தினராகக் கருடன் தயாரிப்பு அமைப்பின் பணிப்பாளர் எல்ரோய் அமலதாஸ், விசேட விருந்தினர்களாக ஆதவன் தொலைக்காட்சியின் செய்தி முகாமையாளர் லவேந்திரன் ஜெனநாயகன், ஸ்டெம்ஸ் ஹெல்த் கியார் (Care) நிறுவனத்தின் முகாமையாளர் தயாபரநாதன் கிறிஸ்னா, கராத்தே கலையகத்தின் கிழக்கு மாகாண பிரதிநிதி டொமினோ ஜெயதிலக் மற்றும் விருந்தினர்களாக சிரேஷ்ட ஆசிரியர் வி.இளஞ்செழியன், கராத்தே கலையகத்தின் மத்திய மாகாண பிரதிநிதி எம்.தம்பிராஜா, அகில இலங்கை சமாதான நீதிவான் கே.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இதன்போது கராத்தே சுற்றுப்போட்டிகளில் பதக்கங்களைப்பெற்ற SKAI கலையகத்தின் மாணவர்கள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

















# “தீவக மக்களுக்கு விரைவில் தீர்வு”

எஸ்.தில்லைநாதன்

“தீவக மக்களுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவில் நாம் முன்னெடுக்க இருக்கிறோம். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனுடன் கலந்துரையாடியிருக்கின்றேன்” என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன் விரும்பிகளால், வட இலங்கை சர்வோதய குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு வெள்ளிரும்பிலான குடி தண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு, புங்குடுதீவு புஸ்பா மணி மண்டபத்தில் சனிக்கிழமை (28) இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநரால், பவுசர் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு உதவிய நலன் விரும்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.



அதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், “குடிநீரின் தேவை இன்று தீவகப் பகுதியில் மாத்திரம் அல்ல யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது. அங்கு குடி தண்ணீரின் தரம் மற்றும் அளவு தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

கடல் நீரை நன்னீராக்கி குடிநீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும், வேறு குடிநீர் மூலங்களையும் கண்டறிய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் எண்ணம் சிந்தனை நல் நோக்குடன் இருந்தமையால் அவர் அன்று ஆரம்பித்த வட இலங்கை சர்வோதய சங்கம் வியாபித்து விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. நாம் நல்ல எண்ணத்துடன் எதை ஆரம்பித்தாலும் அதை இறை சக்தியாவது வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்.

இந்த ஊர் மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால் தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கிறார்கள். இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்திப் பலன்பெறவேண்டும்” என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புங்குடுதீவு பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவை எனவும் ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வட இலங்கை சர்வோதய சங்கத்தின் அறங்காவலர் செல்வி பொன் யமுனாதேவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மன வளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேள், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், தீவகம் தெற்கு பிரதேச செயலர் க.சிவகரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமாரன் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.




# நித்திரை இன்றி காவல் காக்கின்றோம்

வ.சக்தி

“காட்டு யானைகளால் நித்திரை இன்றி இராப்பகலாக வயல் நிலங்களைக் காவல் காக்கின்றோம்” என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ரி.தியாகராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் சனிக்கிழமை (29) மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “காட்டு யானைகளால் போரதீவுபற்று பிரதேசத்தின் வேத்துசேனை, வெல்லாவெளி, காக்காச்சிவட்டை, பாலையடிவட்டை, போன்ற பல கிராமங்கள் தினமும் பாதிக்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு யானை வேலி அமைத்துத் தருமாறும், அப்பகுதியில் தங்கி இருக்கும் காட்டு யானைகளை அப்புறப்படுத்துமாறும், அல்லது காட்டு யானைகளை, யானைகள் சரணாலயத்திற்குக் கொண்டு விடுமாறும், பலமுறை தெரிவித்தும் அவை இதுவரையில் நடைபெறவில்லை.

தினமும் மக்களும் விவசாயிகளும் கால்நடைகளும் அவ்வப்போது காட்டு யானைகளால் காவு கொள்ளப்பட்டு உயிரிழக்க நேரிடுகிறது.

எதிர்வரும் மாதத்தில் எமது வேளாண்மைச் செய்கை அறுவடை செய்வதற்குத் தயாராக உள்ள இந்த நிலையில் காட்டு யானைகளை தற்போது அப்புறப்படுத்த வில்லையெனில் வாழ்வாதார ரீதியாகவும் நாம் தொடர்ச்சியாக இம்முறையும் பாதிக்கப்படக்கூடிய துப்பாக்கி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடன் கருத்தில் கொண்டு காட்டு யானைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி யானைகள் சரணாலயத்தில் கொண்டு விடுமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வெல்லாவெளி பகுதியில் துர்ந்துபோயிருந்த வாய்க்கால் ஒன்று அகழப்பட்டு தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. அந்த வாய்க்காலின் மிகுதி புனரமைப்பு வேலைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் உள்ள பல நூற்றுக்கணக்கான வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை முற்றுமுழுதாக திருத்தியமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.




# பூநகரி பிரதேச சபைக்கு விருது

நிதர்ஷன் வினோத்

வடக்கு மாகாண சுற்றுலாத் துறையில் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கிய உள்ளூராட்சி சபைக்கான விருது பூநகரி பிரதேச சபைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில்

வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (28) இடம்பெற்ற நிகழ்வில் குறித்த விருது வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் விருதை வழங்கிவைக்க பூநகரி பிரதேச சபை செயலாளர் இரட்ணம் தயாபரன் பெற்றுக்கொண்டுள்ளார்.



# உயிருக்கு போராடும் யானை

எம்.எம்.அஹமட் அனாம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் அடம்படிவட்டுவான் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(29) அன்று விவசாயி ஒருவரது வயல் பிரதேசத்தில் யானை ஒன்று எழுந்து நடக்க முடியாமல் உயிருக்குப் போராடி வரும் நிலையில் காணப்பட்டுள்ளதுடன், அப்பகுதி விவசாய நிலங்களையும் சேதப்படுத்தியுள்ளதாகவும் விவசாயிகள்

தெரிவித்துள்ளனர்.

கிரான் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த யானையைப் பார்வையிட்டு அதற்கான முதலுதவிகளை வழங்கியதுடன் யானையின் நிலவரம் தொடர்பாக அம்பாறை வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த யானை பத்து வயது தொடக்கம் பதினைந்து வயதுக்குள் இருக்கலாம் என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கணிக்கப்பட்டுள்ளது. வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் கல்குடா அனர்த்த அவசர உதவி சேவை மற்றும் அகீல் அவசர உதவி பிரிவு என்பவற்றின் உறுப்பினர்கள் உதவிகளைச் செய்து வருகின்றனர்.

# இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளர் கைது

பெருந்தொகை பணமோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் இலங்கை வங்கியின் முன்னாள் முகாமையாளர் ஒருவர், யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவால் சனிக்கிழமை (28) கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 15 இலட்சம் ரூபாவை ஒருவரிடம் இருந்து மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைமறைவாக இருந்த நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை





எஸ்.தில்லைநாதன்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பூரண அனுசரணையோடு கருகம்பனை பொது அமைப்புகளும் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டமும் இணைந்து நடத்திய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை சனிக்கிழமை(28) காலை கருகம்பனை சந்தியில் ஆரம்பமானது.

இதில் கிராம சேவையாளர், பொதுச் சுகாதார பரிசோதகர், கிராமத்தவர்கள், இளைஞர்கள் பிரதேச சபை ஊழியர்கள், விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்ட உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.


## விற்பனைக்கு

கொத்தட்டுவ-கொலொண்ணாவ வீதி கட்டிடம் மற்றும் தனியார் வீதியை அனுகும் வாய்ப்புடன் கூடிய 28 பேர்ச் நிலம் விற்பனைக்கு உள்ளது. தொடர்புக்கு 070 793 8396

# சுயசத்தியம் செய்துகொள்வதற்கான நாள் நெருக்குகிறது

2024ஆம் ஆண்டுக்கு விடை கொடுத்து, 2025 புத்தாண்டு இன்னும் ஒரு நாளில் பிறக்கவிருக்கின்றது. இருக்கின்றவர்கள் புத்தாண்டை வரவேற்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். அன்றாடம் கூலி வேலைச் செய்து இரண்டொரு வேளை மட்டுமே அரைவயிறும் கால் வயிறும் உண்டு வாழ்பவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு சமாளிப்பு பதில்களைக் கூறி ஆறுதல் படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

அரிசிக்கான தட்டுப்பாடு இன்றுமே நீங்கவில்லை. பொருட்களின் விலைகள் எகிறிக்கொண்டே போகிறது. இருக்கும் பொருட்களை முதலாளிமார்கள் மட்டுமன்றி சிறிய வர்த்தகர்களும் பொருட்கள் பதுக்கத் தொடங்கி விட்டனர். விலை குறைந்திருக்கும் போதே ஆகக்கூடுதலாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்திக் கொள்கின்றனர். இது அவர்களின் வியாபார நுட்பமாகும். எனினும், விலை குறைந்திருக்கும் போதே பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியாது சாமானியர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

இவ்வாறான நிலையில், இதுவரையில் இருந்த சகல தீயப் பழக்கங்களையும் இன்றுடன் விட்டுவிடுவேன் எனவும் புத்தம் புதியத் திட்டங்களை நாளைமுதல் ஆரம்பிப்பேன் எனவும் சுய சத்தியம் செய்துகொள்ளும் நாளே வருடத்தின் கடைசி நாளாகும். அச்சத்தியத்தைக் காப்பாற்றுவோர் பலர், இன்றுடன் விட்டுவிடுவேன் என புத்தாண்டு முதல்நாளே மீள ஆரம்பிப்போரும் உள்ளனர்.

ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் புதியத் திட்டங்களைத் தீட்டி, அதனை நிறைவேற்றிக்கொள்வதற்காக அவ்வருடம் முழுவதும் உழைக்கும் பலரும் எம்மத்தியில் வாழ்கின்றனர். புதிய இலக்குகளை நோக்கிப் பயணிப்போர் பலர். அந்த கனவையெல்லாம் கடந்தகாலங்களில் பொருளாதார நெருக்கடியும் கொன்றுவிட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளின் இறுதி நாளன்று, சுயசத்தியம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் அரிதாகவே இருந்தது. கொரோனா அலை, பொருளாதார நெருக்கடி பொதுவாகவே துன்பங்களைக் கொடுத்துவிட்டது. சிலரை மிக இலகுவாக மேலே தூக்கி நிறுத்தி விட்டது. இன்னும் சிலர் வேலைகளை இழக்கவேண்டிய இருந்தது. பலரும் தொழிலைக் கைவிட்டு விட்டு, சுய கால்களில் நிற்கவேண்டுமெனத் தீர்மானம் எடுத்தனர்.

பொருளாதார நெருக்கடியினால், ஒன்றையேனும் கொள்வனவு செய்யமுடியாது. துர்ப்பாக்கிய நிலைமைக்குள் சிக்கியிருப்போர், புத்தம் புதியத் திட்டங்களைத் தீட்டலாம், ஆனால், நடைமுறைக்கு சாத்தியமாகுமா? பொருளாதார நெருக்கடியால் சிக்கிக்கொள்வோமா? என பலகோணங்களில் சிந்திக்கவேண்டியவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை தூக்கியெழுப்புவதற்கான முயற்சிகளில் இறங்காமல், மக்கள் மீது சுமையேற்றும் அறிவிப்புகளே விடுக்கப்படுகின்றன. மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் போது அவர்கள் மீது மீண்டும் மீண்டும் சுமைகளைச் சுமத்துவதை ஏற்றிக்கொள்ளமுடியாது. தாங்கிக்கொள்கின்றார்கள் என நினைத்து சுமைகளை ஏற்றினால், நிலைமை விபரீதமாகவே முடியும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

ஒருவரது ஆற்றாமை மற்றையோருக்குத் தெம்பு ஊட்டுவதாக அமையலாகாது. எங்கே ஓர் அப்பாவி விழுகின்றான் என்பதை எதிர்பார்க்கும் நபர்கள் இருக்கின்றார்கள்.

ஒருவரது பலவீனத்தின் மூலம், தாங்கள் பலமானவர்களாக முடியும் என எண்ணுவதே துரோகம். முயற்சி செய்யாமல் தட்டிப்பறிக்க எண்ணும் கூட்டங்கள் ஒருபோதும் சுய பலத்தை, நம்புவதும் இல்லை. துர் குணங்களைக் கைவிடுவதுமில்லை.

ஒழுக்கக்கேடான செயல் உழைப்பதற்கு எளிதான காரியம் என்று எண்ணுபவர்கள். நியாய தர்மங்களை உபதேசங்கள் செய்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

பலவீனமான குணங்களுடன் வாழும் நபர்கள், அதனை ஒருபோதும் ஒத்துக்கொள்வதுமில்லை. துணிச்சலுடன் எழுச்சியும் நெஞ்சினுள் வீரமும் அவசியம்.

திறமையான விளையாட்டு வீரர்கள் கூட, சில சமயம், தன்னுடன் போட்டியிடுபவர்கள் தன்னை வென்று விடுவார்களோ என எண்ணக்கூடாது. போட்டியில் விட்டுக்கொடுத்தல் கூடாது. துணிச்சலற்றவர்களை வீழ்த்திவிட இரக்கமற்றவர்கள் காத்திருக்கின்றார்கள்.

நன்றி-பருத்தியூர் பால.வைரவநாதன்

# தமிழ்த் தேசியத்தின் அழிவு

லக்ஸ்மன்

"நீதிமன்ற வழக்குகளை மீளப் பெறு, பொதுச் சபையை உடனடியாகக் கூட்டு, யாப்பின்படி தலைவர் உட்பட யாரையும் வெளியேற்றும் அதிகாரம் மத்திய குழுவிற்கு இல்லை என்பதை ஏற்றுக்கொள், 2019இல் பொதுச்சபையால் நியமிக்கப்பட்ட தேர்தல் நியமனக் குழுவை இயங்கவிடு, மத்தியக் குழுவின் பலவீனமான தீர்மானங்களால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே" இது சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் நடைபெற்ற விடுதியின் முன்னால் வைக்கப்பட்டிருந்த பதாகையின் வாசகங்கள்.

இதன் தலைப்பு தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே என்பதாக இருந்தது.

இந்த வாசகங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு, அதிலுள்ள சிலர், தனிப்பட்ட ஒருவர், குழப்பங்களைச் செய்து கொண்டிருப்பவர் என பலரையும் சுட்டியே எழுதப்பட்டிருக்கின்றன.

இப்போது இவற்றினைத் தனித்தனியாக ஆராய்வது முக்கியமல்ல. இருந்தாலும், பொதுவில் இவ்விடயம் தமிழ்த் தேசியத்தின் அழிவு குறித்தே சுட்டியிருக்கிறது.

இலங்கையின் தமிழர்களுடைய அரசியல் மாத்திரமல்ல, சிங்களவர்கள், முஸ்லிம்களுடைய அரசியலைச் செய்கின்ற அரசியல் கட்சிகளும் பல்வேறு சிதைவுகளையும் மாற்றங்களையும் கண்டே நகர்ந்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற பெரும் கட்சிகளின் வரலாற்றை எடுத்து நோக்கினாலேயே அது தெரிந்துவிடும். இப்போது இக் கட்சிகள் இல்லையென்றாகி விட்டது.

பிரதான கட்சிகளாக இருந்த கட்சிகளின் நிலை அது. திடீரென உருவான சிறிலங்கா பொதுஜன பெரமுன எழுந்தவுடனேயே காணாமல் போய்விட்டது. இப்போது மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து மாற்றம் பெற்ற தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்திருக்கிறது.

இது மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படாமையினாலே நிகழ்ந்துவிடுவதுண்டு.

இருந்தாலும், இலங்கை தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கக்கட்டச் சட்டத்தினை ஏற்றுக்கொண்ட விவகாரத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், இ.மு.வி.நாகநாதன் போன்றோரால் 1949 டிசெம்பரில் உருவாக்கப்பட்டிருந்தது. ஒற்றையாட்சி முறை இலங்கையில் தமிழர் உரிமையுடன் வாழ்வதற்கு உகந்ததல்ல என்றுகூறி தமிழரசுக் கட்சி கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்தது. ஆனால் ஒற்றையாட்சியை மறந்து இப்போது சமஷ்டியையே அக்கட்சி இப்போது ஆதரிக்கிறது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் அடுத்த படியாக உருவாகியிருக்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒற்றையாட்சியை முழுமையாக எதிர்க்கின்ற கட்சியாக இருக்கிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலங்களிலிருந்து தமிழ் மக்களின் ஆதரவினைப் பெற்று வளர்ந்து வந்தது.

1956ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பகுதிகளில் பெரும்பான்மை இடங்களை வென்று, தமிழர் அரசியலில் முன்னணிக்கு வந்தது.

தாய்க் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் இணைந்திருந்தும், மொழிக் கொள்கை முதலான முக்கிய பிரச்சினைகளில் தமிழரின் விருப்பங்களை நிறைவு செய்யும் எவ்வித முன்னேற்றத்தையும் கொண்டுவர முடியாமற்போனமை காரணமாகவே இந்த ஆதரவு தமிழ் மக்களிடம் கிடைக்க வழி சமைத்திருந்தது.

1956இல் ஆட்சியைப் பிடித்த பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்தபோது அதற்கு எதிராக அகிம்சை முறையில் தமிழரசுக்கட்சி போராட்டங்களை நடத்தியது. இப் போராட்டங்கள் அரசினால் கடுமையாக அடக்கப்பட்டன.

1958இல் தமிழருக்கு எதிராக நடந்த இனக் கலவரம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செல்வநாயகம், பண்டாரநாயக்க ஆகியோரிடையே பண்டா- செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இருந்த போதும், பெரும்பான்மைச் சிங்களவரின் கடும் எதிர்ப்புக் காரணமாகக் கிழித்தெறியப்பட்டது. இச் செயற்பாடு இன ரீதியான சிக்கல் மேலும் வலுப்பெறக் காரணமாகியது.

ஒற்றையாட்சிக் கொள்கை மீது நம்பிக்கை வைத்து ஆட்சியிலிருக்கும் சிங்கள அரசாங்கங்களுக்கு ஒத்துழைக்க முனைந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரசுக்கு எதிராகத் தமிழரசுக் கட்சி செயற்பட்டது.

அதனால், இது 1960 மார்ச், 1960ஆம் ஆண்டு ஜூன் மற்றும் 1965, 1970 ஆகிய ஆண்டு தேர்தல்களில் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் தம் ஆதரவினை வழங்கினர்.

ஆனால், இப்போது ஒற்றையாட்சிக்குள்ளேயே ஐக்கிய இராஜ்ஜியத்தை ஏற்கும் அளவுக்கு அது தலைகீழாகவே மாறியிருக்கிறது.

1970ஆம் ஆண்டு நடந்த தேர்தல் சிரிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்த ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது.

இந்தக் காலத்தில் புதிய குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பிலேயே பிரித்தானியர் ஆட்சிக்காலங்களில் தமிழர்களைப் பாதுகாக்கும் வகையிலிருந்த சரத்துகள் நீக்கப்பட்டன.

இவ்வேளையில், அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இனையத் தமிழ்க் கட்சிகளும் எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை.

இந்த நிலையில், தங்களுடைய எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு ஒன்றிணைந்து போராட இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தமிழ்க் கட்சிகளும் முன்வந்ததன் விளைவாக, எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரைக் கூட்டுத் தலைவர்களாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது.

இதன் பின்னர், சகல அரசியல் நடவடிக்கைகளும் இக்கூட்டணியினாலேயே முன்னணியினாலேயே முன்னெடுக்கப்பட்டன.

பின்னர் வந்த காலங்களில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் தனித்தனியாகிப் போயின.

அதன் பின்னர் வந்த தேர்தல்களில் வடக்கு கிழக்குத் தமிழர்களுடைய அரசியல் கட்சியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியே இருந்தது. 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னமே அதன் சின்னமாக இருந்தது. 2004ஆம் ஆண்டில் கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவராக இருந்த வீ.ஆனந்தசங்கரி பிரிந்து சென்றார்.

அந்த முரண்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சின்னம் வழங்குவதில் பிரச்சினையாக இருந்தது. அதனால் 1972க்குப் பின்னர் கைவிடப்பட்டிருந்த அல்லது கிடப்பில் போடப்பட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இந்தப் புதுப்பித்தலின் பின்னர், தமிழர் அரசியலில் மீண்டும் வெளியே வந்த வீட்டுச் சின்னம் ஆதிக்கம் செலுத்தியது. இலங்கையில் ஆயுத யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டதையடுத்து, இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைச் சிதைக்கும் முறையொன்றைக் கடைப்பிடித்தது. அந்த நடவடிக்கை இப்போது அக் கட்சிக்குள்ளேயே பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

தலைவர், மத்தியக் குழு, பொதுக் குழு என அப்பிரச்சினை வளர்ந்து கொண்டு செல்கிறதே தவிரக் குறைந்தபாடில்லை. அதற்கு யுத்த மௌனிப்புக்குப் பின்னர் அக்கட்சிக்குள் வந்த, உள்வாங்கப்பட்டவர்களின் ஆதிக்கங்கள் காரணமாகவே நிகழ்ந்து வருகிறது. இருந்தாலும், அதனை ஏற்றுக்கொள்வதற்கு யாரும் தயாராகவில்லை.

கடந்த தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கில் பெரும்பான்மையை இழந்தது. கிழக்கில் ஒருவகையில் அந்த இழப்பு தடுக்கப்பட்டது. இருந்தாலும், மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீதான நம்பிக்கையில், அக்கறையில், பிடிப்பில், விருப்பத்தில் ஆதரித்தார்களா என்றால் அது முழுமையான உண்மையல்ல என்பதும் பலருக்கும் தெரிந்ததே.

எது எவ்வாறானாலும், தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் பலமான ஓர் அரசியல் கட்சியாக விளங்கி வருகிறது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காகப் போராட்டம் ஊடாக அரசியலுக்குள் நுழைந்த கட்சிகள் காணாமலாக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற கூட்டமைப்பு சிதைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில்தான், பிரிவும், சிதைவும், குத்து வெட்டுக்களும் கொண்ட தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் ஏன் மக்களுக்கான அரசியலைச் செய்வதில் தலைமைப் போட்டி, விட்டுக் கொடுக்காத தன்மை போன்றவை காணாமல் போவதாக இல்லை என்ற கேள்வி உருவாகியிருக்கிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்குப் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீளப்பெறப்படுமா? என்பதும் பொதுக்குழு /கூட்டப்படுமா? என்பதும் கட்சி சார்ந்ததல்ல தமிழ்த் தேசியத்தின் அக்கறையின் பாலாக முடிவுக்குட்படுத்தப்படவேண்டும். வீணே கூட்டங்களை நடத்துவதும் கலந்துரையாடுவதும் பயனற்றதே.

## கடிதங்கள்

## மக்கள் அவதி



மஸ்கெலியா - காட்மோர் பிரதான வீதியானது சுமார் ஒரு வருட காலமாகப் புனரமைக்கப்பட நிலையில் காணப்படுவதால் சாரதிகள் மற்றும் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா, டீசைட் சந்தியிலிருந்து காட்மோர் வரையான பிரதான வீதி மொக்கா பிரதேசத்தில் 03 கிலோமீற்றர் வரை பாரியளவில் சேதமடைந்து காணப்படுவதால் சாரதிகளும் பயணிகளும் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாகப் பிரதேச மக்கள் காட்டுவழி பாதையைப் பயன்படுத்திவருவதாகத் தெரிவிக்கின்றனர்.

உரிய நேரத்தில் பேருந்துகளை இயக்க முடியாத நிலை காணப்படுவதாகவும், வாகனங்கள் அடிக்கடி பழுதடைந்து, அந்த வாகனங்களின் பழுதுபார்ப்புக்கு அதிகப் பணம் செலவழித்து அவஸ்தைக்கு உள்ளாகின்றதாகவும் பஸ் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சாலையை உடனடியாக சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- காமினி பண்டார இளங்கந்திலக






### இலங்கையின் தட்டாம்பூச்சிகளை உள்ளடக்கிய

# SLT-MOBITEL 2025 நாட்காட்டி

இலங்கையின் இயற்கை பாரம்பரியத்தை தொடர்ந்தும் கொண்டாடும் வகையில், SLT-MOBITEL தனது 2025 நாட்காட்டியில் இலங்கையின் தட்டாம்பூச்சிகளை (Dragonflies of Sri Lanka) உள்ளடக்கியுள்ளது. இந்த வண்ணமயமாக பூச்சிகளின் சூழல்சார் முக்கியத்துவத்தை இந்த நாட்காட்டி வலியுறுத்துவதுடன், நாட்டில் ஆரோக்கியமான சூழல்கட்டமைப்புகளை தக்க வைத்துக் கொள்வதில் இவை ஆற்றும் முக்கிய பங்களிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

நீர்நிலைகளின் பாதுகாவலர்களாக தட்டாம்பூச்சிகள் அறியப்படுவதுடன், நீரின் தரத்தை குறிப்பதாகவும், சூழல்கட்டமைப்பின் ஆரோக்கியத்தை வெளிப்படுத்துவதுடன், பாதுகாப்பு இயக்கத்தை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றும் பூச்சி இனமாகவும் அமைந்துள்ளது. அவற்றின் கண்கவர் வண்ணங்களினால் பொது மக்கள் மத்தியில் பெரிதும் அறியப்படுகின்றன. இதர பூச்சி இனங்களுடன் ஒப்பிடுகையில் அளவில் பெரியனவாக அமைந்துள்ளதுடன், பறக்கும் ஆற்றலுடன், மனிதனால் மாற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் பிரசன்னத்தை கொண்டிருக்கும்.

இலங்கையில் 132க்கும் அதிகமான தட்டாம்பூச்சி இனங்கள் காணப்படுவதுடன், அவற்றில் 59 அழிவடையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளவையாகும். SLT-MOBITEL 2025 நாட்காட்டியில் 13 வகையான தட்டாம்பூச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. மேலும், அவற்றின் சூழல்சார் முக்கியத்துவத்தையும், அழகிய தோற்றத்தையும் வெளிப்படுத்தும் வகையிலும் இந்த நாட்காட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது.

SLT-MOBITEL இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “குறிக்கோள் அடிப்படையில் இயங்கும் தேசிய வர்த்தக நாமம் எனும் வகையில் SLT-MOBITEL, மக்களை டிஜிட்டல் முறையில் இணைப்பது என்பதற்கு அப்பால் சென்று செயலாற்றுகின்றது. எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு இயற்கையை வரவேற்பதற்கு ஊக்குவிப்பதிலும் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது. 2025 நாட்காட்டி தட்டாம்பூச்சிகளின் சூழல்சார் முக்கியத்துவம் மற்றும் அழகை வெளிப்படுத்துவதுடன், இலங்கையின் பாரம்பரியத்தின் அங்கமாக அமைந்துள்ள உயிரியல் பரம்பலை தூண்டுவதிலும் கவனம் செலுத்துகின்றது. இந்தத் திட்டத்தினூடாக, பாதுகாப்பு மற்றும் நிலைபேறாண்மை தொடர்பில் உரையாடல்களை ஏற்படுத்தச் செய்ய நாம் எதிர்பார்ப்பதுடன், சூழல் வழிகாட்டல்களில் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்புடன் பொருந்தச் செய்வதாகவும் அமைந்துள்ளது” என்றார்.

SLT-MOBITEL இன் 2025 நாட்காட்டியில் 13 விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் காணப்படும் வெவ்வேறு தட்டாம்பூச்சி இனங்களின் தோற்றம் மற்றும் சிறப்பம்சங்களை இது கொண்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு காட்சிப் பயணத்தை கொண்டதாக அமைந்திருப்பதுடன், கரையோரங்கள் முதல் மலைநாடுகள் வரை காணப்படும் தட்டாம்பூச்சிகளின் வாழ்க்கை சுழற்சி மற்றும் சூழல்சார் பணிநிலை ஆகியவற்றை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. இந்த காட்சி அமைப்புகளை அனுபவம் வாய்ந்த கலைஞர்களான புலஸ்தி எதிரிவீர, பரமி வித்யாரத்ன மற்றும் உதேஷிகா பிரியதர்ஷனி ஆகியோரினால் வடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்துக்கு வளவாளராக அமில் சுமனபால ஆதரவளித்திருந்ததுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சூழல் விஞ்ஞானப் பிரிவின் புகழ்பெற்ற கள ஆய்வாளராகவும் திகழ்கின்றார்.

19 வருடங்களாக SLT-MOBITEL இன் வருடாந்த நாட்காட்டிகளில் இலங்கையின் சூழல் மற்றும் கலாசார அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. 2025 நாட்காட்டியில் இலங்கையின் தட்டாம்பூச்சிகள் உள்வாங்கப்பட்டுள்ளமையானது சூழல்சார் மீட்சி மற்றும் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதுடன், இலங்கையின் இயற்கை பாரம்பரியத்தை பேணுவது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் SLT-MOBITEL தொடர்ந்தும் கவனம் செலுத்துகின்றது.

## ‘சுவமக நடமாடல் இனங்காணல் அலகு’



யூனியன் அஷ்யூரன்ஸ், தனதுபிரதான சமூகப்பொறுப்புணர்வு செயற்திட்டமான சுவமக ஊடாக, சமூகத்தின் நலனுக்குவள மூட்டும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்த வண்ணமுள்ளது. இலங்கையில் அதிகரித்துச்செல்லும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் பங்களிப்பு வழங்கும் வகையில், தனதுவர்த்தகநாம நோக்கமான வாழ்க்கையை பாதுகாத்தல் மற்றும் அனைவரின் நலனுக்கும் வளமூட்டல் என்பதற்கமைவாக, சுவமக திட்டத்தை அறிமுகம் செய்திருந்தது. நீரிழிவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிறந்த ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவிப்பதில் இந்தத்திட்டம் பரந்தளவில் கவனம் செலுத்துவதுடன், ஆரம்பகட்டத்தில் இனங்காண்பதற்கு உதவுதல் மற்றும் இடர் முகாமைத்துவத்துக்கு பங்களிப்பு செய்வதுடன், சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்புவதிலும் கவனம் செலுத்துகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கமாக, நிறுவனம்தனது ‘சுவமக நடமாடும் இனங்காணல் அலகு’ என்பதை கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் அறிமுகம் செய்திருந்தது.

இந்நிகழ்வில், சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை நீரிழிவு சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். சுவமக நடமாடும் இனங்காணல்அலகு என்பது, தகைமைபெற்ற சுகாதாரபராமரிப்பு நிபுணர்களைக் கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய நீரிழிவு பரிசோதனைகளை இலவசமாக முன்னெடுக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட நடமாடும் ட்ரக் வண்டியாக அமைந்துள்ளது. இந்த பரிசோதனைகளைமேற்கொண்ட பங்குபற்றுனர்களுக்கு சுகாதார அறிக்கைகள் வழங்கப்படுவதுடன், சுகாதார இடர்களை தணித்துக்கொள்வது மற்றும் நிர்வகித்துக் கொள்வது தொடர்பான பிரத்தியேகமான வழிகாட்டல்களும் வழங்கப்படும். இந்தநடமாடும்அலகு இலங்கை முழுவதும் விஜயம் செய்யவுள்ளதுடன், சகல வயதினருக்கும் இலவச பரிசோதனையை மேற்கொள்ளும் வசதிவழங்கப்படுவதை உறுதிசெய்யும். யூனியன் அஷ்யூரன்ஸ் வாடிக்கையாளர்கள் மற்றும் அதன் வாடிக்கையாளர் அல்லாதவர்களுக்கும் இந்த பரிசோதனைகளில் பங்கேற்க முடியும் என்பதால், பொதுமக்கள் சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ளும் அணுகல் மேம்படுத்தப்பட்டுள்ளது.

# “ஆமையின் இரத்தமே உயிரை காத்தது”



**எம்.ஏ.றமீஸ்**

கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கடற்றொழிலுக்காக தனது நண்பருடன் கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளி ஐ.எல்.இர்பான் என்பவர் நாடு கடந்து சென்றுள்ளதுடன், பல இன்னல்களை அனுபவித்து, இந்திய சிறையில் இருந்து ஆறு மாதங்களின் பின்ன ர் வீடு வந்து சேர்ந்திருக்கிறார்.

அத்துடன், அவர் அனுபவித்த இன்னல்கள தொடர்பிலும் விபரித்துள்ளார்.

சம்பவத்தன்று கடற்றொழிலுக்காக சென்ற ஐ.எல்.இர்பா ன், இரவு நேரத்தில் தாம் சென்ற படகின் இயந்திரம் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து, செய்வதறியாது சுமார் 25 தினங்கள் நீரில் தத்தளித்த வண்ண இருந்துள்ளார்.

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்ன பாலமுனை-02 ஐச் சேர்ந்த 41 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான ஐ.எல்.இர்பான் என்பவரும், அட்டாளைச்சேனை-06ஆம் பிரிவினைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 25 வயதுடைய கே.ஆர்.எம்.நிஸ்பர் என்பவரும் அட்டாளைச்சேனை கப்பலடி துறையில் இருந்து இவ்வாறு கடற்றொழிலுக்காகச் சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் எவ்வித உதவியும் இன்றி காற்று நகர்த்தும் திசைகளுக்கெல்லாம் படகில் தத்தளித்த வண்ணம் படகில் அமர்ந்து சுமார் 25 தினங்கள் கடலில் தத்தளித்தவாறு நாட்களைக் கழித்துள்ளனர்.

தாம் கொண்டு சென்ற உணவு, நீர் போன்றன ஒரே நாளில் தீர்ந்து போயுள்ளன. உண்பதற்கும் குடிப்பதற்கும் எதுவுமின்றி உயிர் போகும் நிலையை இருவரும் அடைந்திருக்கிறார்கள். தன்னுடன் பயணித்த நண்பன் கடலில் பாய்ந்து காணாமல் போய் இதுவரை அவர் பற்றிய தகவல் இன்றிய நிலையும் விபரிக்க முடியாத சோகமாய் உள்ளது என உயிர் தப்பி வந்துள்ள இர்பான் குறிப்பிடுகின்றார்.

பகல் பொழுதுகளில் தம்மை இராட்சத மீன்கள், திமிங்கிலங்கள் உண்டு விடுமோ என்ற பீதியுடனும், இரவுப் பொழுதுகளில் விபரிக்க முடியாத பல்வேறான அச்ச நிலைமையுடன் இவர்கள் பொழுதுகளைக் கழித்துள்ளனர். உயிரைக் கையில் பிடித்தவாறு கண்களை மூடும் போதெல்லாம் தமது குழந்தைகள் மனைவிமார் ஆகியோரை மனக்கண் மூலமாகவும், கனவின் மூலமாகவும் கண்டு சோகத்தின் எல்லை வரை தாம் இவர்கள் சென்றிருக்கின்றார்கள்.

இவ்வாறு பொழுதுகளைக் கழிந்து வரும் வேளையில் தண்ணீர் தாகம் தொண்டையை நெருக்கியதால், சில நாட்கள் தொடர்ச்சியாக உவர்நீரான கடல் நீரைப் பருகி வந்துள்ளனர். இதனால் இருவரின் வாய்களில் உடலில் நோய் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒரு நாள் தம் அருகில் பாரிய கப்பலொன்று பயணித்ததாகவும், அந்தக் கப்பலில் உள்ளவர்கள் தமது கண்களில் நன்கு புலப்பட்டதாகவும் அவர்களிடம் சைகைகள் மூலம் கத்திக் கதறி உதவிகள் கேட்டபோதும் எவ்வித பயனும் இவர்களுக்குக் கிட்டவில்லை.

நாட்கள் நகர்ந்து உயிர் பிரியப் போகிறது என்ற நிலை ஏற்பட்டபோது, ஒரு நாள் ஆமை ஒன்று தமது படகருகில் ஏறியுள்ளது. இவர்கள், அந்த ஆமையைப் பிடித்து அதன் இரத்தத்தைக் குடித்துள்ளனர். இவ்வாறு இரத்தத்தை அருந்திய பின்னர் இவர்களின் உடல் நிலைமை சற்று தேறி உள்ளது. சில நாட்கள் மீன்களைப் பிடித்து உண்டதாகவும், மீன்களைக் கருவாடாக உலர்த்தி சில நாட்கள் இவர்கள் உண்டதாகவும் தெரிய வருகிறது.

இதன்போது தம்மோடு பயணித்த நிஸ்பர் என்ற நண்பர் தமக்குச் சற்றுத் தொலைவில் கப்பலொன்று பயணிப்பதாகவும், கடல் நீரில் நீந்திச் சென்று கப்பலை அடைந்து தமக்காக உதவி கேட்டு தமது குடும்பத்தவர்களுடன் போய் வாழ்ந்து விடலாம் என்று தன்னிடம் கூறியதாக இர்பான் தெரிவித்துள்ளார்.

கடலில் நீந்திச் சென்று உயிர் பிழைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக நிஸ்பர் அடிக்கடி தம்மிடம் குறிப்பிட்டதாக உயிர் பிழைத்து வீடு சேர்ந்திருக்கும் இர்பான் எம்மிடம் தெரிவித்தார். கடலில் பாய்ந்து நீந்தும் முயற்சிகளைத் தாம் பலமுறை முறியடித்ததாகவும், ஒரு நாள் மாலை வேளையில் தாம் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் எரிபொருள் கொண்டு சென்ற கொள்கலன் ஒன்றுடன் நண்பர் நீரில் பாய்ந்ததை தாம் விழித்தெழுந்த போது அவதானித்ததாகவும் அதன் பின்னர் அவர் பட்ட கவலை, பீதி போன்றவற்றைக் கண்ணீர் மல்க எம்மிடம் குறிப்பிட்டார்.

தனிமையில் கடலில் தத்தளித்து உணர்வுகளின்றி இருந்தபோது சுமார் 25 ஆவது நாள் தன்னை யாரோ தூக்குவது போலும் தனக்கு நீர் புகட்டுவது போலும் இருந்ததாகவும் அப்போது தான் நினைவிழந்த நிலைமையில் இருந்ததாகவும் இர்பான் குறிப்பிடுகின்றார்.

இந்திய மீனவர்கள் இவ்வாறு தன்னை காப்பாற்றிய விடயம் பின்னாட்களில் புரிந்ததாகவும், அதன் பின்னர் சென்னை மற்றும் திருச்சி போன்ற இடங்களில் உள்ள சிறைச்சாலையில் சுமார் 150 நாட்கள் தான் தங்க வைக்கப்பட்டு வாடியதாகவும், நினைவு திரும்பிய போது தனது குடும்பத்தவர்களுடன் கதைத்து நாடு திரும்பியதாகவும், நாடு திரும்புவதற்கு சுமார் 4 இலட்சம் வரை தமது குடும்பத்தவர்களுக்கு செலவானதாகவும் குறிப்பிடும் இர்பான் தாம் சென்ற இயந்திரப் படகு தற்போது இந்தியாவில் இருந்து விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும் தற்போது கடற்றொழில் செய்வதற்கு உடலும் மனமும் இடம் கொடுக்கவில்லை என அவர் தெரிவிக்கின்றார்.

ஆறு மாதங்கள் கடந்து தற்போது வீடு சேர்ந்த அவர் கடற்கரைக்குச் சென்ற போது, தம் கூடவே பயணித்து இதுவரை காணாமல் போன நண்பரின் நினைவு தன்மை வெகுவாக பாதித்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட எனக்கும், நண்பரின் குடும்பத்தார்களுக்கும் வாழ்வாதார உதவிகளை நாட்டின் ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட துறை சார்ந்தோர் உதவ வேண்டும் என குறிப்பிடுகின்றார்.





தென்கொரியா

விமான விபத்தில்

# 179 பேர் பலி

தென்கொரியாவில், ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்ற விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்து தலைநகர் பேங்கொக்கில் இருந்து 175 பயணிகள், 6 விமான ஊழியர்கள் என மொத்தம் 181 பேருடன் தென்கொரியாவின் முவான் நகர் நோக்கி, ஞாயிற்றுக்கிழமை(29) விமானமொன்று சென்றுகொண்டிருந்தது.

முவான் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்தபோது, விமானம் விபத்துக்குள்ளாகி, வெடித்துச் சிதறியது. முன்னதாக, இந்த கோர விபத்தில் சிக்கி 62 பேர் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில், தென் கொரியாவின் முவான் நகரில் நடந்த விமான விபத்தில் இரண்டு நபர்களைத் தவிர

அதில் பயணம் செய்த 179 பேரும் உயிரிழந்துள்ளதாக என தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

சம்பவம் அறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர், விபத்தில் படுகாயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர்.

இருந்தபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழப்புகள் அதிகரித்துள்ளது. இந்த விபத்து குறித்து அதிகாரிகள் உயர்மட்ட விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விமான பயணிகளில் 173 பேர் தென் கொரியர்கள் எனவும் 2 பேர் தாய்லாந்து நாட்டை சேர்ந்தவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

விபத்துக்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், ஒரு பறவை மோதியதால் விமானத்தில் லேண்டிங் கியர் செயலிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜேஜூ விமான நிறுவன வரலாற்றில், இதுவே முதல் உயிரிழப்புகளைக் கொண்ட மோசமான விபத்தாகும்.

தென் கொரியாவின் மிகப்பெரிய குறைந்த கட்டண விமான நிறுவனமான இது, 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்டிரா

3ஆவதாகவும் பெண் குழந்தை:

# ஆத்திரத்தில் மனைவியை தீ வைத்து எரித்த கணவன்

மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்த 3ஆவது குழந்தையும் பெண் குழந்தையாகப் பிறந்துள்ளது என்ற ஆத்திரத்தில் மனைவி மீது கணவன் பெற்றோல் ஊற்றி, எரித்து கொலை செய்த சம்பவமொன்று, இடம்பெற்றுள்ளது.

மராட்டியத்தின் பர்பானி மாவட்டத்தில், கங்காகேத் நாகா என்ற பகுதியைச் சேர்ந்த குந்த்லிக் உத்தம் காலே (வயது 32) அவரது மனைவி மெய்னா தம்பதிக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில், 3ஆவது குழந்தையும் பெண் குழந்தையாகப் பிறந்துள்ளது. இதனால், மனைவி மீது குறித்த நபர் ஆத்திரத்தில் இருந்துள்ளார்.

இருவருக்கும் இடையே அடிக்கடி இதுபற்றி சண்டை நடந்து வந்துள்ளது. இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை (26) இரவு, தம்பதிக்கு இடையே இதுபற்றி வாக்குவாதம் ஏற்பட்டு உள்ளது.

வாக்குவாதம் முற்றவே, குறித்த நபர், மனைவி மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்து எரித்துள்ளார்.

இதில், அந்த பெண் அலறியபடி வீட்டை விட்டு வெளியே ஓடியுள்ளார். சுற்றியிருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்டனர்.

இதையடுத்து, குறித்த பெண், சிகிச்சைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

தமிழகம்

'சிக்கன் ரைஸ்' உட்கொண்ட

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் வைத்தியசாலையில்



ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம், ராஜாஜிபுரம் பகுதியில், 'சிக்கன் ரைஸ்' உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி இரவு, கருங்கல்பாளையத்தில் இயங்கி வந்த ஹோட்டலொன்றில் 'சிக்கன் ரைஸ்' வாங்கி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் தந்தை, மகள் 3 பேரும் பகிர்ந்து உண்டதும், மறுநாள் முதல் கடுமையான வயிற்று வலியால் பாதிக்கப்பட்டனர்.

மேலும், அவர்கள் 3 பேரும் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றும் உடல்நலம் சரியாகவில்லை. இதையடுத்து ஈரோடு அரசு தலைமை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வந்தது தெரியவந்தது.

இதுகுறித்து ஈரோடு மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை நியமன அதிகாரி மருத்துவர் தங்கவிக்னேசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, அவரது உத்தரவின் பேரில், உணவு பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து, பின்னர் குறித்த ஹோட்டலில் சோதனை நடத்தியுள்ளனர்.

அப்போது, உணவக சமையல் அறை சுகாதாரமற்ற முறையில் இருந்ததும், சரியான பராமரிப்பு இல்லாமல் இருந்ததையும் அதிகாரிகள் கண்டறிந்தனர்.

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ.) உரிமம் பெறாமல் இயங்கியதும், இறைச்சி மற்றும் மூலப்பொருட்கள் வாங்கியதற்கான ரசீது, கழிவு எண்ணெய் தொடர்பான நடைமுறைகள், உணவு கையாளுவதற்கான மருத்துவ தகுதி சான்று என எந்த முறையான ஆவணங்கள் இல்லாததும் தெரியவந்தது.

அதை தொடர்ந்து குறித்த ஹோட்டல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.



இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில்

# பலமான நிலையில் அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் பலமான நிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில், மூன்றாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந் நிலையில் மெல்பேணில் வியாழக்கிழமை(26) ஆரம்பமான இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஸ்டீவன் ஸ்மித்தின் 140, மர்னுஸ் லபுஷைனின் 72, சாம் கொன்ஸ்டாஸின் 60, உஸ்மான் கவாஜாவின் 57, அணித்தலைவர் பற் கமின்ஸின் 49, அலெக்ஸ் காரியின் 31 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 474 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 4, இரவீந்திர ஜடேஜா 3, ஆகாஷ் டீப் 2, வொஷிங்டன் சுந்தர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, நிதிஷ் குமார் ரெட்டியின் 114, யஷஸ்வி ஜைஸ்வாலின் 82, சுந்தரின் 50, விராட் கோலியின் 36, ரிஷப் பண்டின் 28, லோகேஷ் ராகுலின் 24 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஸ்கொட் போலண்ட், கமின்ஸ், லையன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஜஸ்பிரிட் பும்ரா (4), மொஹமட் சிராஜ் (3), ஜடேஜாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய நான்காம் நாள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் லையன் 41 ஓட்டங்களுடனும், ஸ்கொட் போலண்ட் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். முன்னதாக லபுஷைன் 70, கமின்ஸ் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.



# சிற்றி செல்லும் முசியாலா

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்கள வீரரான ஜமால் முசியாலாவைக் கைச்சாத்திடுமாறு தனது கழகத்துக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முகாமையாளர் பெப் குவார்டியோலா கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மியூனிச்சுடன் எதிர் வரும் 2026ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தை 21 வயதான முசியாலா கொண்டிருக்கிறார்.



இத்தாலிய சீரி ஏ தொடர்: சமநிலையில்

# அத்லாண்டா- லேஸியோ போட்டி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், லேஸியோவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா சமப்படுத்தியது.

அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்கோ பிறெஸ்சியானி பெற்றதோடு, லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை பிஸாயோ டெலே-பஷிரு பெற்றார்.



சிம்பாப்வேக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# பலமான நிலையில் ஆப்கானிஸ்தான்

சிம்பாப்வேக்கெதிரான முதலாவது டெஸ்டில் பலமான நிலையில் ஆப்கானிஸ்தான் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், புலவாயோவில் வியாழக்கிழமை (26) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே ஷோன் வில்லியம்ஸின் 154, பிரயன் பென்னிட்டின் ஆட்டமிழக்காத 110, அணித்தலைவர் கிறேய்க் எர்வினின் 104, பென் கர்ரனின் 68, தகுட்ஸ்வனஷே கைட்டானோவின் 46 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 586 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் 3, ஸியா-உர்-றெஹ்மான் 2, நவீட் ஸட்ரான், ஸகிர் கான் 2, அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் ஆப்கானிஸ்தான், ரஹ்மத் ஷாவின் ஆட்டமிழக்காத 231, அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடியின் ஆட்டமிழக்காத 141 ஓட்டங்களோடு சனிக்கிழமை (28) மூன்றாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 425 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பந்துவீச்சில், பிளஸிங்க் முஸர்பனி, ட்ரெவர் குவான்டு ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 30 டிசெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.